டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 128 - Madurai | Online Edition

# பருவநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதில் தொழில்நுட்பம் சார்ந்த நடவடிக்கைகள் அவசியமாகும்

## மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் தகவல்

புது தில்லி, நவ.22

பருவநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதில் தொழில்நுட்பம் சார்ந்த நடவடிக்கைகள் அவசிய மாகும் என்று மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார். பிரேசிலில் நடைபெற்ற சர்வதேச பருவநிலை குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வளரும் நாடுகளில் இதற்கான முயற்சிகள் வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து அவர் வலியுறுத்தினார்.

நீடித்த வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் பரஸ்பரம் நம்பிக்கை, தொழில்நுட்ப ஒத்துழைப்பு போன்றவற்றில் இந்தியா – ஜப்பான் நாடுகளிடையே நீண்ட கால உறவுகள் உள்ளதாக அவர் குறிப்பிட்டார். பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இந்தியா – ஜப்பான் நாடுகள் இணைந்து செயல்பட்டு வருவதாகவும் பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தின்படி தெளிவான கொள்கைகள் வரையரைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். குறைவான கார்பன் உமிழ்வை உறுதி செய்யும் வகையிலான நடவடிக்கைகளுக்கு இரு நாடுகளின் கூட்டமைப்பு உதவி வருவதாக அவர் தெரிவித்தார். கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதில் மேம்பட்ட தொழில்நுட்பத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகள், தொழில்நுட்பங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் இன்றியமையாதது என்பதை அமைச்சர் பூபேந்தர் யாதவ் சுட்டிக்காட்டினார்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் உயிரி ஊக்கிகளின் தாக்கம் பற்றிய ஒரு நாள் விவசாயிகள் பயிற்சி

கோயம்புத்தூர், நவ.22

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பயிர் மேலாண்மை இயக்குனரகம், உழவியல் துறை, மத்தியப் பண்ணையில் 21.11.25 அன்று 'வேளாண் மற்றும் தோட்டக் கலை பயிர்களில் உயிரி ஊக்கிகளின் தாக்கம்' பற்றிய ஒரு நாள் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

முனைவர் சு.கிருஷ்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர், உழவியல் துறை, வரவேற்புரையாற்றினார். முனைவர் ஆ.மு. கலாராணி, இயக்குநர், பயிர் மேலாண்மை இயக்குனரகம், சிறப்புரையாற்றினார். முனைவர் சு.தமிழ்வேந்தன், பதிவாளர் மற்றும் துணைவேந்தர் (பொறுப்பு) துவக்கவுரையாற்றி நிகழ்வை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியின் நிறைவாக முனைவர் மு.திருக்குமரன், பேராசிரியர், உழவியல் துறை நன்றியுரை யாற்றினார். இப்பயிற்சியில் 104 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இப்பயிற்சியில் தொழில்நுட்ப உரையாக வேளாண் பயிர்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் உயிரி ஊக்கிகளின் பயன்பாடு மற்றும் அவற்றின் முக்கியத்துவம் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் அங்கக வேளாண்மை முறைகள் மற்றும் அதன் நிகழ்கால தேவைகளை பற்றியும் பயிற்சி வழங்கப்பட்டது.




நிகழ்ச்சியின் நிறைவாக துரித முறையில் மண்புழு உரம் தயாரிக்கும் முறையை பற்றி விளக்கி மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# உலக மீன் வள தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு முகாம்

தூத்துக்குடி, நவ.22

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பாக உலக மீன் வள தினம் 2025-ஐ முன்னிட்டு மீன்வள உயிரியல் மற்றும் வள மேலாண்மைத் துறை மற்றும் தூத்துக்குடி மீன்வள மற்றும் மீனவர் நலத்துறை (தமிழ் நாடு அரசு) இணைந்து 21.11.25 அன்று ஆலந்தலை மீன்பிடி கிராமத்தில் 'தமிழகத்தில் வளங்குன்றாத ஆழ்கடல் மீன் வளங்கள் மற்றும் நிலையான பயன்பாடு' குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு முகாமில் 24 மீனவர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்வின் தொடக்க விழா காலை 11.00 மணிக்கு தொடங்கியது.



தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மீன்வள உயிரியல் மற்றும் வள மேலாண்மைத் துறையின் உதவிப் பேராசிரியர் க.கருப்பசாமி, வரவேற்புரையாற்றினார். மேலும், உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர் (பொ.) முனைவர் ரா. துரைராஜா, ஆழ்கடல் மீன்வள வளங்கள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இவ்விழாவின் நிகழ்ச்சியில், ஜேம்ஸ், கிராமக் குழுத் தலைவர் தலைமை தாங்கினார். மேலும், தூத்துக்குடியின் மீன்வள மற்றும் மீனவர் நலத்துறையின் (தமிழ்நாடு அரசு) சாகர்மித்ரா, எம்.அன்னெட்மேரி இம்முகாமை நடத்திட உதவி புரிந்தார்.

மேலும், இத்துறையின் ஊழியர்களான ராகுல், க.கார்த்திக் மற்றும் அன்டோ ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் போது உடனிருந்தனர். இறுதியாக க.கருப்பசாமி, உதவி பேராசிரியர் நன்றியுரையாற்றினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தேனி மாவட்ட தொழில்முனைவோர்களுக்கு அறிவுசார் சொத்துரிமை குறித்து விழிப்புணர்வு



தேனி, நவ.22

தேனி மாவட்டம், காமாட்சிபுரம், சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் ஒவ்வொரு மாதமும் 20ஆம் தேதி தொழில்முனைவோர் களுக்கான சந்திப்பு நடத்தப்பட்டு வருகிறது. இச்சந்திப்பின் முக்கிய நோக்கமாவது வேளாண் அறிவியல் மையத்தின் மூலமாக பயிற்சி பெற்றவர்களுக்கு தொடர் தொழில்நுட்பங்கள் மற்றும் வழிகாட்டுதல் வழங்கு வதற்காக உருவாக்கப்பட்டது. அந்த வகையில் நவம்பர் மாதத்திற்கான தொழில்முனைவோர் சந்திப்பு 20.11.25 சென்டெக்ட் வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் நடைபெற்றது. சென்டெக்ட் நிறுவனத்தின் இணை இயக்குநர் மருத்துவர் ப.சிவராம் தலைமையுரையாற்றினார். திட்ட ஒருங்கிணைப்பாளர் பொ.மகேஸ்வரன், தொழில் முனைவோர் சந்திப்பின் முக்கியத்துவம் மற்றும் எதிர்கால திட்டங்கள் பற்றி சிறப்புரையாற்றினார். அறிவுசார் சொத்துரிமை – காப்புரிமை, புவிசார் குறியீடு மற்றும் வர்த்தக முத்திரை பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் அரசுத் திட்டங்கள் பற்றிய விளக்கங்கள் பற்றி காப்புரிமை முகவர் சி.கோமதி பத்மா திலகர் இணையவழியில் விளக்கமளித்தார். சிறு குறு நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கான இலவச எம்.எஸ்.எம்.இ நிலையான தரச்சான்றிதழ்கள் (இசட்இடி) பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி இசட் அலுவலர் ச.முத்து ராஜா எடுத்துரைத்தார்.

வேளாண் அறிவியல் மையத்தின் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ம.இரம்யாசிவசெல்வி, தொழில்முனைவோர்களுக்கு தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் இதர வழிகாட்டுதல் வழங்கினார். எம்.எஸ்.எம்.இ நிலையான சான்றிதழ்கள் (இசட்இடி) சான்றிதழ்கள் பெற்ற தொழில்முனைவோர்களுக்கு தீ அணைப்பான்கள் இலவசமாக வழங்கப்பட்டன. வேளாண் அறிவியல் மையத்தின் அலுவலர் அ.அனுப்பரியங்கா நன்றியுரையாற்றினார்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

**அன்புடையீர்,**

நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# படகு ஓட்டுநர் உரிமச் சான்றிதழ் பயிற்சி

இராமநாதபுரம், நவ.22

நான் முதல்வன் வெற்றி நிச்சயம் திட்டத்தில் கீழ் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான இராமநாதபுரத்தில் செயல்பட்டு வரும் மீன்வளத் தொழில் காப்பகம் மற்றும் தொழில்சார் பயிற்சி இயக்குனரகம் நடத்தும், படகு ஓட்டுநர் உரிமச் சான்றிதழ் பயிற்சி என்ற ஒரு வாரகால உள்வளாகப் பயிற்சியின் துவக்க விழாவானது 12.11.25 முதல் 20.11.25 வரை நடைபெற்றது.




பயிற்சியின் ஒருங்கிணைப்பாளர் மு.கலையரசன், உதவிப் பேராசிரியர் வரவேற்புரை மற்றும் பயிற்சி விளக்க உரை நிகழ்த்தினார். இப்பயிற்சியில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த 12 மீனவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டார்கள். துணை இயக்குநர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, இராமநாதபுரம் வேல்முருகன், நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் தமது சிறப்புரையில் மீனவர்களுக்கு கடர்சார் எஞ்சின் பராமரித்தல் மற்றும் பழுது நீக்குதல் பயிற்சியின் மூலம் ஏற்படும் நன்மைகளை பற்றி எடுத்துரைத்தார். மேலும், மீனவர்களின் மேம்பாட்டிற்கு மாநில அரசுகள் கொண்டு வந்த திட்டங்களை விரிவாக எடுத்துரைத்தார். மேலும், அவர் தமது சிறப்புரையில் மீனவர்கள் படகு ஓட்டுநர் உரிமம் பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். கடலில் இருக்கும் போது படகு என்ஜினில் பழுது ஏற்பட்டால் மீனவர்களே பழுது நீக்குவதற்கு இப்பயிற்சி மிகவும் உதவியாக இருக்கும் எனவும் கூறினார்.

பங்கு பெற்ற 12 மீனவர்களுக்கு படகு ஓட்டுநர் உரிமமானது மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையால் வழங்கப்பட்டது. மேலும், இந்த ஒரு வார கால உள்வளாகப் பயிற்சியின் போது கடல்சார் மின்னனுச் சாதனங்களைக் கையாளுதல், உலகளாவிய

இருப்பிடம் காட்டி (ஜி.பி.எஸ்) மற்றும் மீன் கண்டுபிடிப்பான்கள் செயல்முறை விளக்கம், மாலுமிக்கலை வரைபடங்கள், மாலுமிக்கலை ஒலிச் சமிக்கைகள் மற்றும் கடற்பயண விதிகள், ஆழ்கடல் மாலுமிக்கலை செயல்முறை விளக்கம், கடைசல் பனிப்பட்டறை இயந்திர செயல்முறை விளக்கம், கடலில் முதலுதவி மற்றும் கடலில் மீனவர் பாதுகாப்பு, ஆழ்கடல் வானிலை, தீயணைப்பு முறைகள் மற்றும் செயல்விளக்கம், கடல் எஞ்சின் பராமரிப்பு செயல்முறை விளக்கம், பாதுகாக்கப் பட்ட நீர்வாழ் உயிரினங்கள் ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் மீனவர்களுக்கு பயன்தரும் வகையில் வழங்கப்பட்டது.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வணிகமுறையிலான காய்கறி மற்றும் பழப்பொருட்கள் தயாரித்தல் பயிற்சி

கோயம்புத்தூர், நவ.22

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வணிக முறையிலான காய்கறி மற்றும் பழப்பொருட்கள் தயாரித்தல் பயிற்சி 25.11.25 மற்றும் 26.11.25 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை வழி) நடைபெறும்.

கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- உலர வைக்கப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள் (Dehydrated vegetables and fruits)
- பலவகைபழ ஜாம் (Mixed fruit jam)
- பழரசம் (Squash)
- தயார் நிலைபானம் (Ready - to - serve beverage)
- ஊறுகாய் (Pickles)
- ஊறுகனி (Candy)
- பழப்பார் (Fruit bar)

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 0422 6611340, அலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# நெல் பயிர் காப்பீட்டு செய்ய கால நீட்டிப்பு

இராணிப்பேட்டை, நவ,22

நெல் பயிர் காப்பீட்டு செய்ய கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே கடைசி தேதி வரை காத்திருக்காமல் முன்னதாகவே தங்களது பயிரை காப்பீடு செய்து பயனடைவீர்.

2025-26ம் ஆண்டு ராபி சிறப்பு பருவத்தில் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்த அரசாணை பெறப்பட்டுள்ளது. வருவாய் கிராம அளவில் சம்பா நெல் பயிர்களுக்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம். சம்பா நெல் பயிர் காப்பீடு செய்ய வரும் நவம்பர் 15ஆம் தேதி கடைசி நாள் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இம்மாதம் 30ம் தேதி வரை பயிர் காப்பீடு செய்ய காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகளும், பயிர் கடன் பெறும் விவசாயிகளும் மற்றும் கடன் பெறாத விவசாயிகளும் விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்யலாம். இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய சிட்டா, நடப்பு ஆண்டு பயிர் சாகுபடி அடங்கல், ஆதார் அட்டை, வங்கி கணக்கு புத்தகம் ஆகிய ஆவணங்களுடன் அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கிளைகள், கிராமிய வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொது சேவை மையங்களை அணுகலாம். மேலும் தகவலுக்கு, அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகவும்.

விவசாயிகள் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்யும்போது சாகுபடி செய்யப்பட்ட பரப்பை விட கூடுதலாக ஒரே சர்வே எண்ணிற்கு ஒன்றுக்கும் மேற்பட்டோர் பதிவு செய்ததை தவிர்க்கவும். சாகுபடி செயப்படுகின்ற நில அளவு எண்ணை இரு வேறு இடங்களில் (பொது சேவை மையம் & வங்கிகளில்) பயிர் காப்பீடு செய்வதை தவிர்க்கவும். நடப்பு பசலி அடங்கல் மட்டும் பயன்படுத்த வேண்டும். அடங்களில் வருவாய் கிராமத்தின் பெயர் மற்றும் பயிரின் பெயர் தெளிவாக இடம் பெற்றிருக்க வேண்டும்.

ஒரே சர்வே எண்ணிற்கு ஒன்றுக்கும் மேற்பட்டோர் பதிவு செய்யும்போது மொத்த காப்பீட்டு பரப்பு சர்வே எண் பரப்பிற்கு மிகாமல் இருக்க வேண்டும். சம்பா நெல் பயிர் காப்பீடு செய்ய விவசாயியின் பிரிமியம் தொகை ரூ.545/-.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ, பொது சேவை மையங்களிலோ பதியக்கூடிய பயிர் காப்பீடுகளில் வருவாய் கிராமத்தின் பெயர், விவசாயின் பெயர், அல்லது குத்தகைதாரரின் பெயர், வங்கி எண் ணுாய்றீளீ ளீலி ள. தொடர்பு கைபேசி எண் இவை அனைத்து சமர்ப்பிப்பதற்கு முன்னதாக சரிபார்த்துக் கொள்ளவும். பயிர் காப்பீடு செய்த பின் காப்பீடு ரசீதில் அனைத்து விவரங்களையும் தவறாமல் சரி பார்க்கவும்.

எனவே விவசாயிகள் தங்கள் பயிரை காப்பீடு செய்ய கடைசி நாள் வரை காத்திடாமல் நவம்பர் 30ஆம் தேதிக்கு முன்னதாகவே காப்பீடு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# வில்லங்க சான்று போல இனி பட்டா வரலாற்றையும் தெரிந்து கொள்ளலாம்? அது எப்படி?




ஒரு காலத்தில் சொத்துக்கு பட்டா வாங்குவது குதிரை கொம்பாக இருந்தது. ஆனால் தற்போது தமிழக அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக எளிதாகி விட்டது. அதாவது (https//e.services.tn.gov.in) என்ற இணைய தளம் மூலமாக பட்டா பெற விண்ணப்பித்து பொதுமக்கள் விவசாயிகள் எளிதாக பெற முடியும்.

### பட்டா–வால் கிடைக்கும் நன்மைகள்?

அரசின் நலத்திட்டங்கள் மானியங்கள் பெற தனிபட்டா அவசியமாகிறது. கூட்டு பட்டா இருந்தால் எளிதாக கிடைப்ப தில்லை. அதே போல தற்போது ஒரு சொத்தை பத்திரப்பதிவு (REGISTRATION) செய்தவுடன், உட்பிரிவு இல்லாத சொத்துக் களுக்கு கூட உடனடியாக பட்டா மாறுதல் செய்யப்படுகிறது. தற்போது சொத்து பற்றிய உரிமை விபரங்களை எளிதாக அறிந்து கொள்ளும் வகையில் தமிழக அரசின் வருவாய் துறையால் ‘பட்டா வரலாறு‘ (PATTA HISTORY) என்ற ஆன் லைன் செயலி அறிமுகப்படுத்தபட உள்ளது.

### இதனால் என்ன என்ன பயன்கள்?

பத்திர பதிவு என்பது ஒரு உரிமை என்றாலும் பட்டா வாங் கினால் தான் அந்த சொத்தின் சட்ட பூர்வமான உரிமையை பெற முடியும். பட்டா இல்லாத இடங்களுக்கு அரசின் நலத்திட்டங்களை பெற முடியாத நிலை தான்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

ஒரு சொத்தின் தற்போதைய உரிமையாளர்கள் வருவாய் துறை மூலமாக வழங்கப்படும் பட்டா மூலமாக தெரிந்து கொள்ளலாம். ஆனால் தற்போது பட்டா வரலாறு என்பதை பத்திர பதிவு துறை வழங்கும் வில்லங்க சான்றிதழ் போல அனைத்து விவரங்களையும் பட்டாவில் ஏற்பட்ட பரிமாற்றங் களையும் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த சேவை தற்போது ஒரு சில தாலுகாவில் பரீட்சார்த்த முறையில் அறிமுக செய்ய பட உள்ளது.

இதன் மூலமாக அந்த நிலத்தின் முன்பிருந்த பட்டா வைத் திருந்தவர்களின் பெயர்கள், பெயர் எப்போது மாற்றப்பட்டது. எந்த ஆணையின் பேரில் மாற்றம் நடைபெற்றது? பட்டா எந்த கால கட்டத்தில யாரிடம் இருந்தது போன்ற விபரங்களை முழுமையாக தெரிந்து கொள்ள முடியும். இந்த பட்டாவுக்கு வில்லங்கம் பெறும் (E.C) நடைமுறை அடுத்த வாரத்தில் செயல்படுத்த முடிவு செய்துள்ளதாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.




இந்த பட்டா வரலாறுக்கு விண்ணப்பிக்க தனியாக கட்டணம் செலுத்த வேண்டும். தற்போது 2014 ஆம் ஆண்டு முதல் தான் பட்டா வரலாற்றை தெரிந்து கொள்ள முடியும். வருவாய்துறை, மற்றும் பத்திர பதிவு துறையில் ஆங்கிலேயே காலத்தில் இருந்துவந்த நடைமுறைகளை தற்போதைய காலகட்டத்திற் கேற்ப சீர்திருத்த முறைகள் நிறைய செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகள் உயிர்மச்சான்று பெற அழைப்பு!

நாமக்கல், நவ.22

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் உயிர்மச்சான்று பெற மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என நாமக்கல் மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் இரா.கலைச்செல்வி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது, இந்திய அளவில் பல்வேறு கால சூழ்நிலைகள் மற்றும் பல காரணங்களால் கடந்த 50 ஆண்டுகளில் வேளாண் தொழிலில் எண்ணற்ற பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக இரசாயன உரங்கள், களைக் கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு மனித இனத்திற்கு மட்டுமின்றி இன்னும் பல உயிரினங்களின் வாழ்வியல் முறைகளில் பெரும் தாக்கத்ததை ஏற்படுத்தி உள்ளது. இதனால் மனித இனத்தில் சர்க்கரை நோய், புற்றுநோய் மற்றும் பெயரிடப்படாத பல நோய்கள் நம் முன்னால் பெரிய சவாலாக நின்று கொண்டிருக்கிறது. இதற்கான சிறந்த தீர்வை தேடி நாம் நகரும் போது, ஆகச் சிறந்த வகையில் அனைவருக்கும் பொருத்தமான தீர்வாக வாழ்வியல் முறையில் ஏற்பட வேண்டிய மாற்றமும், பல ஆயிரம் ஆண்டுகளாக நாம் செய்து வந்த பாரம்பரிய வேளாண் முறையுமே பெரும் நம்பிக்கையாக உள்ளது.

இந்த வாழ்வியல் முறையில் மாற்றம் என்பது நமது பாரம்பரிய வேளாண் முறையான இயற்கை வேளாண்மை என்று அழைக்கக்கூடிய உயிர்ம வேளாண்மையில் இருந்து துவங்குகிறது. உயிர்ம வேளாண்மையில் நாம் பயன்படுத்த வேண்டியது பாரம்பரிய விதை ரகங்களையும் நாட்டு காய்கறி களையும் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள முன்வர வேண்டும்.

இத்தகைய நன்மைகள் கொண்ட உயிர்ம வேளாண்மையை செய்ய விரும்பும் வேளாண் பெருமக்கள், எந்தவித கட்டணமும் இன்றி மத்திய, மாநில அரசுகளால் கொண்டு வந்துள்ள தேசிய உயிர்ம உற்பத்தி திட்டம் மற்றும் பங்கேற்பாளர் உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றில் பதிவு செய்து தங்களால் உற்பத்தி செய்யப்படும் உயிர்ம பொருட்களை, ஆரோக்கிய வாழ்வை விரும்பும் அத்தனை பேருக்கும் நீங்களே விலை நிர்ணயம் செய்து வழங்கலாம்.

மேலும், இந்த உயிர்ம வேளாண்மையின் கீழ் பதிவு செய்ய விரும்பும் விவசாயிகள் விண்ணப்ப படிவம், பண்ணையின் பொது விபரங்கள், பண்ணை வரைபடம், மண் மற்றும் நீர் பரிசோதனை விபரம், ஆண்டு பயிர் திட்டம், துறை உடனான ஒப்பந்த படிவம், பட்டா, அடங்கல், ஆதார் அட்டை, நிரந்தர கணக்கு அட்டை, வங்கி கணக்கு புத்தக நகல் மற்றும் புகைப்படம் 3 நகல்கள், தடையில்லா சான்று (NOC–நிலம் கூட்டு பட்டாவாக இருக்கும் பட்சத்தில்) ஆகிய விபரங்களுடன் நாமக்கல் மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு இந்த திட்டத்தினை முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.




# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இந்திய மண்ணியல் சங்கத்தின் (ISSS) 89வது ஆண்டு மாநாட்டின் நிறைவு விழா

கோயம்புத்தூர், நவ.22

இந்திய மண்ணியல் சங்கத்தின் (ISSS) 89வது ஆண்டு மாநாட்டின் நிறைவு விழா கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.



நாடு முழுவதும் உள்ள புகழ்பெற்ற மண்ணியல் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள்மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வை, இந்திய மண்ணியல் சங்கம் (ISSS), தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கோயம்புத்தூர் பிரிவு, மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை மற்றும் இந்திய மண்ணியல் சங்கம், புதுதில்லி ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்தன.

முனைவர் ரஞ்சன் பட்டாச்சார்யா, செயலாளர் இந்திய மண்ணியல் சங்கம் (ISSS), புதுதில்லி கூட்டத்தினரை வரவேற்று தொழில்நுட்ப அமர்வுகள் குறித்த சுருக்கமான அறிக்கையை வழங்கினார். முனைவர் வி.முருகப்பன், முன்னாள் இயக்குநர் (மண் மற்றும் பயிர் மேலாண்மை ஆய்வுகள்) தனது பாராட்டு உரையில், ISSS இன் வருடாந்திர மாநாடு மண்ணியல் விஞ்ஞானிகள் மற்றும் பங்கு தாரர்களிடையே அறிவைப் பரிமாறிக் கொள்வதற்கும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் ஒரு முக்கியமான தளமாக செயல்படுகிறது என்று சுட்டிக்காட்டினார்.


முனைவர் ப.பாலசுப்ரமணியம், இயக்குநர் (இயற்கை வள மேலாண்மை), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தனது சிறப்புரையில், இந்தக் கோளில் உள்ள அனைத்து உயிரினங்களின் இருப்பைப் பற்றியும், 'எல்லாம் மண்ணிலிருந்து வந்து மண்ணுக்கே திரும்பச் செல்கிறது' என்றும் குறிப்பிட்டார்.

முனைவர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர், கல்வியாளர், கோவை, காந்திய சிந்தனைகள், நுகர்வு வரம்பு (COC) சூத்திரம் – அதிகமாக பங்களித்து குறைவாக நுகருங்கள் என்பதை வலியுறுத்தி, இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்களை வாழ்த்தினார். முனைவர் எம்.ரவீந்திரன், ஆராய்ச்சி இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தனது சிறப்புரையில், நிலையான மண் மேலாண்மை மற்றும் காலநிலை மீள் தன்மை குறித்த தேசிய கவனம் அதிகரித்து வருவதை வலியுறுத்தினார். மண்வளத்தை மேம்படுத்துவதில் இந்திய அரசும் தமிழக அரசும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதாக குறிப்பிட்டார். சென்சார்கள், ஊட்டச்சத்து குறைபாடு அறிதலுக்கான கையடக்க சாதனங்கள் மற்றும் ஆக்ஸிஜன் தூண்டப்பட்ட வண்ண அளவீட்டு மாற்றங்கள் மூலம் மண்ணின் நுண்ணுயிர் செயல்பாட்டை அளவிடும் திறன் கொண்ட சிறிய கருவிகளின் வளர்ந்து வரும் பங்கை அவர் விவரித்தார். ஊட்டச்சத்து பயன்பாட்டுத் திறனை மேம்படுத்து வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, மூன்றாம் தலைமுறை உரங்கள், நீரில் கரையக்கூடிய உரங்கள், நானோ உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் போன்ற அடுத்ததலை முறை உள்ளீடுகளை அவர் எடுத்துரைத்தார்.

'மண்ணைக் காப்பாற்றவும் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும்' பல்துறை அணுகுமுறையின் அவசியத்தை வலியுறுத்தினார். தேசிய நிலையான வேளாண்மை இயக்கம் (NMSA), தேசிய இயற்கை வேளாண்மை இயக்கம் (NMNF) மற்றும் கார்பன் திட்டங்கள் மூலம் மீத்தேன் வெளியேற்றத்தைக் குறைப்பதற் கான முயற்சிகள் போன்ற தேசிய பணிகளை அவர் மேலும் எடுத்துரைத்தார். நிலையான மண் மேலாண்மையின் ஐந்து வழிகாட்டும் கொள்கைகளை அவர் மீண்டும் வலியுறுத்தினார். இரசாயன உள்ளீடுகளைக் குறைத்தல், மண்ணின் கரிம கார் பனை விரைவாக மேம்படுத்துதல், மேம்பட்ட நீர் பயன்பாட்டு திறன், நிலத்தடி நீர் ரீசார்ஜ் மற்றும் மண் பாதுகாப்பு – இந்த தொழில்நுட்பங்களை பரந்த அளவில் ஏற்றுக் கொள்வதற்கு

ஆராய்ச்சிகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அவர் முடித்தார். முனைவர் து.செல்வி, தலைவர், இந்திய மண்ணியல் சங்கம் (ISSS) – கோயம்புத்தூர் பிரிவு மற்றும் அமைப்புச் செயலாளர் & பேராசிரியர்மற்றும் தலைவர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், அமர்வுக்குத் தலைமை தாங்கி, மண்ணியல் துறையில் விஞ்ஞானிகளின் பங்களிப்புகளை அங்கீகரித்து விருதுகளை வழங்க ஏற்பாடு செய்தார்.

முனைவர் ஏ.கே.பத்ரா, துணைவேந்தர், BCKV, மேற்கு வங்கம், தனது சிறப்புரையில், இந்த மாநாடு இந்திய மண்ணியல் சங்கம் ISSS–ன் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் என்று கூறினார். நிலச்சீரழிவு, பல்லுயிர் இழப்பு மற்றும் காலநிலை மாற்றம் ஆகிய மூன்று முக்கிய உலகளாவிய சவால்களை முனைவர் பத்ரா எடுத்துரைத்தார், மேலும் உணவு முறையின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய அங்கமாக விவசாயம் இருப்பதால் உடனடி அறிவியல் தலையீடு தேவை என்றும் கூறினார். வாழ்க்கை முறைகள் கரிமப் பொருட்களைச் சார்ந்து உள்ளது என்றும், இன்றைய தீவிர விவசாய முறைகள் நீண்ட காலநிலைத் தன்மையை நோக்கி மறுசீரமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் மீண்டும் வலியுறுத்தினார். மூன்று நாள் மாநாட்டைப் பற்றிக் கூறிய அவர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடந்த விவாதங்கள் மண்ணைப் பாது காத்தல், உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் நிலையான விவசாய முறைகளை மேம்படுத்துதல் பற்றிய ஆழமான நுண்ணறிவுகளை வழங்கின என்று குறிப் பிட்டார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஒழுக்கம், விருந்தோம்பல் மற்றும் நிறுவன சிறப்பை அவர் பாராட்டினார். முனைவர் மனோஜ் ஸ்ரீவஸ்தவா, இணைச் செயலாளர், இந்திய மண்ணியல் சங்கம், ஐ.எஸ்.எஸ்.எஸ், புதுதில்லி, முறையாக நன்றி தெரிவிக்கும் உரையுடன் அமர்வு நிறைவடைந்தது. அனைத்து பிரமுகர்கள், ஏற்பாட்டாளர்கள், பங்கேற்பாளர்கள் மற்றும் ஆதரவு நிறுவனங்களின் பங்களிப்புகளை அவர் பாராட்டினார். இந்தியாவின் விலைமதிப்பற்ற மண் வளங் களைப் பாதுகாப் பதில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள், மாணவர்கள் மற்றும் பங்குத ாரர்களுக்கு பயனளிக்கும் வகையில், அறிவு பரிமாற்றம் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஒரு முக்கிய தளமாக இந்த மாநாடு தொடர்ந்து செயல்படுகிறது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# புதிய மதிப்பு கூட்டு பொருட்கள் அறிமுக விழா




கன்னியாகுமரி, நவ.22 மகளிர் கல்வி விழிப்புணர்வு மற்றும் உரிமைகள் சங்கம் (மலர்) சார்பில் கிராம ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் முழு நேர பணி யாளர்களுக்கான மாவட்ட அளவிலான பயிற்சி 22.11.25 அன்று காலை 11 மணி அளவில் அலுவலக பயிற்சி கூடத்தில் நடந்தது.

V.தமயந்தி, தோவாளை ஒன்றிய கிராம ஒருங்கிணைப்பாளர் வரவேற்புரை வழங்கினார். R.செலின்மேரி, கௌரவ தலைவர் மற்றும் மாவட்ட தலைவர் A.விஜயலட்சுமி ஆகியோர் தலைமை உரையாற்றினர். பின்னர் சிறப்புரையாற்றிய பேராசிரியர் தி. ராஜ் பிரவீன், மகளிர் சுய உதவிக் குழுக்கள் புதிய தொழில்நுட்பங் களை பயன்படுத்தி தொழில் துவங்குவது பற்றி விளக்கினார். பின்னர் கருத்துரை வழங்கிய கிள்ளிகுளம் தொழில் முனை வோர் மேம்பாட்டு மைய முதன்மை செயல் அதிகாரி க.அருண், சமூக தளங்களை பயன்படுத்தி மதிப்பு கூட்டி விற்பனை செய்வது, ட்ரோன் தொழில்நுட்ப பயிற்சியில் கலந்து கொள்வது பற்றி விளக்கினார். பின்னர் மலர் நிறுவனத்தின் சார்பில் புதிய மதிப்பு கூட்டுப் பொருட்களை அறிமுகம் செய்து மலர் மாவட்ட துணைத்தலைவர் ஜா.ஜாண்சிலிபாய் பேசினார். மலர் உறுப்பினர்கள் புதியதாக தயார் செய்த கருப்பு கவுணி கஞ்சிப் பொடி, கிறிஸ்துமஸ் வண்ண விளக்குகள், கார்த்திகை தீபம் போன்றவை அறிமுகம் செய்யப்பட்டது. புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட கருப்பு கவுணி கஞ்சி பொடி முதல் விற்பனையை மலர் மாவட்ட செயலாளர் ஜா.ஜினோபாய் துவங்கி வைத்தார். பணியாளர் னி. கவிதா பெற்றுக் கொண்டார். சிறுதானிய உணவு ஆண்டை முன்னிட்டு பாரம்பரிய உணவு உற்பத்தியில் ஈடுபட்டு வரும் மலர் நிறுவனம் இனிவரும் காலங்களில் புதிய மதிப்பு கூட்டு பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட உள்ளனர். சுய உதவி குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்கள் சுமார் 300 பேர் கலந்து கொண்ட அறிமுக விழாவில் சுபிதா நன்றியுரை தெரிவிக்க அறிமுக விழா இனிதே நிறைவு பெற்றது.

# இந்தியாவின் சிறுதானியப் புரட்சி : ஒரு விரிவான அறிக்கை

இந்தியாவின் விவசாயத் துறையில் ஒரு அமைதியான புரட்சி நிகழ்ந்து வருகிறது. இது சிறுதானியங்கள், தினை வகைகள் மற்றும் பிற பாரம்பரிய பயிர்களை மீண்டும் மைய நீரோட்டத் திற்கு கொண்டு வருகிறது. பல தசாப்தங்களாக பசுமைப் புரட்சியின் விளைவாக அரிசி மற்றும் கோதுமை ஆதிக்கம் செலுத்திய நிலையில், தற்போது நிலைத்தன்மை, ஊட்டச்சத்து மற்றும் கலாச்சார அடையாளம் ஆகியவற்றின் அடிப்படையில் மறக்கப்பட்ட தானியங்கள் புத்துயிர் பெறுகின்றன. இந்த மறு மலர்ச்சிக்கு இளம், சூழல்-சார்ந்த விவசாயிகள், புதுமையான சமையல் கலைஞர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் தலைமை தாங்குகின்றனர். இத்தானியங்கள் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன், குறைந்த நீர் தேவை மற்றும் உயர் ஊட்டச்சத்து மதிப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளதால், இந்தியாவின் உணவுப் பாதுகாப்பிற்கு ஒரு முக்கிய தீர்வாகக் கருதப்படுகின்றன. இருப்பினும், சந்தைப்படுத்தல், உள் கட்டமைப்பு மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு ஆகியவற்றில் உள்ள சவால்களைக் கடப்பது இந்த இயக்கத்தின் முழுமை யான வெற்றிக்கு அவசியமாகும்.

### 1. அறிமுகம் : மறக்கப்பட்ட தானியங்களின் மறுமலர்ச்சி

1960-களில் நிகழ்ந்த பசுமைப் புரட்சி, அரிசி மற்றும் கோதுமை உற்பத்தியை மையப்படுத்தியதன் விளைவாக, இந்தியாவின் பல பூர்வீக தானியங்கள் வழக்கொழிந்து போயின. கேழ்வரகு (ராகி), சோளம் (ஜோவர்), கம்பு (பாஜ்ரா) மற்றும் வரகு (கோத்ரி) போன்ற பல தானியங்கள் முக்கியத் துவத்தை இழந்தன. ஆனால், இன்று நிலைமை மாறி வருகிறது. சுற்றுச்சூழல் சீர்கேடு மற்றும் நவீன உணவுப் பழக்கங்களின் குறைபாடுகள் குறித்த விழிப்புணர்வு அதிகரித்து வருவதால், இந்த 'மறக்கப்பட்ட தானியங்கள்' மீண்டும் இந்திய விவசாயத்திலும், உணவுத் தட்டுகளிலும் முக்கிய இடத்தைப் பிடிக்கத் தொடங்கியுள்ளன. இது ஒரு உணவுப் பழக்க மாற்றம் மட்டுமல்ல, இது காலநிலை மாற்றம், கலாச்சாரம் மற்றும் அடையாளம் ஆகியவற்றோடு தொடர்புடைய ஒரு ஆழமான இயக்கமாகும்.

## 2. மறுமலர்ச்சிக்கான முக்கிய உந்து சக்திகள்

இந்தத் தானியங்களின் மீள்வருகைக்கு பல முக்கிய காரணங்கள் உந்துசக்தியாக விளங்குகின்றன.

### காலநிலை மாற்றம் மற்றும் நிலைத்தன்மை

**வறட்சி தாங்கும் திறன் :** சிறுதானியங்கள் போன்ற பாரம்பரிய பயிர்கள் வறண்ட மற்றும் கடினமான சூழல்களிலும் செழித்து வளரக்கூடியவை. அவை குறைந்த நீரைப் பயன்படுத்துகின்றன, இது குறைந்து வரும் நிலத்தடி நீர் ஆதாரங்களைக் கொண்ட பகுதிகளுக்கு மிகவும் அவசியமானது.

**இரசாயன உரங்கள் இல்லாமை :** இந்தப் பயிர்கள் இயற்கை யாகவே வெப்பம் மற்றும் பூச்சிகளை எதிர்க்கும் திறன் கொண்டவை. எனவே, அவற்றுக்கு இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் தேவை மிகவும் குறைவு.

**மண் வளம் :** பாரம்பரிய பயிர்கள் மண்ணின் ஆரோக்கியத்தை மீட்டெடுக்க உதவுகின்றன. சுற்றுச்சூழல் ஆர்வலர் வந்தனா சிவாவின் வார்த்தைகளில், 'தாகம் கொண்ட பயிர்களைக் கொண்டு காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராட முடியாது. நமது சிறுதானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் உயிர்வாழ்வதற்கான மரபணு ஞானத்தைக் கொண்டுள்ளன.'

### ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம்

**சிறந்த ஊட்டச்சத்துக்கள் :** ஒரு காலத்தில் 'ஏழைகளின் உணவு' என்று முத்திரை குத்தப்பட்ட சிறுதானியங்கள், இன்று 'சூப்பர் தானியங்கள்' (super grains) என்று போற்றப் படுகின்றன. அவை இரும்புச்சத்து, நார்ச்சத்து, கால்சியம் மற்றும் ஆக்ஸி ஜனேற்றிகள் (antioxidants) நிறைந்துள்ளன.

**வல்லுநர் பார்வை :** இந்திய சிறுதானியங்கள் ஆராய்ச்சி நிறுவனத் தின் வேளாண் விஞ்ஞானி டாக்டர் மீரா நாயர் கூறுகையில், 'களைகள் கூட முளைக்கத் தயங்கும் இடங்களில் சிறுதானியங்கள் வளரும். மாறும் காலநிலையில் உணவுப் பாதுகாப்பை நீங்கள் விரும்பினால், ஆடம்பரமான இறக்குமதிகளைப் பார்க்க வேண்டாம். உங்கள் சொந்த மறக்கப்பட்ட உணவுப் பண்டங்களைப் பாருங்கள்.'

### கலாச்சாரம் மற்றும் அடையாளம்

**பாரம்பரிய தொடர்பு :** இந்தத் தானியங்கள் இந்தியாவின் நாட்டுப் புறப் பாடல்கள், திருவிழாக்கள் மற்றும் தலைமுறை தலைமுறை யாகப் பகிரப்பட்ட சமையல் குறிப்புகளுடன் ஆழமாகப் பிணைக்கப் பட்டுள்ளன. கர்நாடகாவின் 'கேழ்வரகு கட்டி' முதல் குஜராத்தின் 'கம்பு ரொட்லா' வரை, பிராந்திய அடையாளத்தின் ஒரு பகுதியாகும்.

**சமையல் கலைஞர்களின் பங்களிப்பு :** கோவாவைச் சேர்ந்த செஃப் அவினாஷ் மார்ட்டின்ஸ் போன்றோர், தங்கள் நவீன உணவு கைகளில் நாச்னி (கேழ்வரகு) மற்றும் வரகு போன்ற தானியங்களை இணைக்கின்றனர்.

அவர் கூறுகிறார், ‘இது சுவையைப் பற்றியது மட்டுமல்ல. இது நமது மண், நமது முன்னோர்கள் மற்றும் நமது அடையாளம் ஆகியவற்றின் கதைகளைச் சொல்வது.‘

**பொருளாதார வாய்ப்புகள்**

**அதிகரிக்கும் சந்தை மதிப்பு :** நுகர்வோரிடையே விழிப்புணர்வு



அதிகரித்துள்ளதால், இந்தத் தானியங்களுக்கான சந்தை மதிப்பு உயர்ந்துள்ளது. ஜார்க்கண்டைச் சேர்ந்த விவசாயி லலிதா தேவி, 'முன்பு இந்தப் பயிர்களை வளர்த்ததற்காக எங்களைக் கேலி செய்தார்கள். இப்போது வியாபாரிகள் இரட்டிப்பு விலைக்கு வாங்க வருகிறார்கள்' என்று குறிப்பிடுகிறார்.

**புதிய சந்தை இணைப்புகள் :** 'தேசி கிரேன் கலெக்டிவ்' மற்றும் 'பார்ம்2ஃபுட் ஃபவுண்டேசன்' போன்ற அமைப்புகள், சிறு விவசாயி களை நுகர்வோருடன் நேரடியாக இணைக்கின்றன. இது விவசாயி களுக்கு நல்ல விலை கிடைக்கவும், அவர்களின் பாரம்பரிய விளை பொருட்களுக்கு அங்கீகாரம் கிடைக்கவும் உதவுகிறது.

**3. இயக்கத்தின் முக்கியப் பங்குதாரர்கள்**

இந்த மறுமலர்ச்சிக்கு விவசாயிகள், தொழில்முனைவோர் மற்றும் அரசாங்கங்கள் எனப் பல தரப்பினரும் பங்களிக்கின்றனர்.

**பங்குதாரர் வகை :** இளம் விவசாயிகள்

**பங்களிப்பு :** பாரம்பரிய விவசாய முறைகளை நவீன கண்ணோட் டத்துடன் அணுகி, நிலைத்தன்மையை மையமாகக் கொண்டு பயிரிடுகின்றனர்.

**எடுத்துக்காட்டு :** கர்நாடகாவைச் சேர்ந்த மென்பொருள் பொறி யாளரான 29 வயது அமித் பாட்டீல், பெருந்தொற்று காலத்தில் தனது மூதாதையர் நிலத்திற்குத் திரும்பி சிறுதானியங்களைப் பயிரிடுகிறார்.

**பங்குதாரர் வகை :** சமையல் கலைஞர்கள்

**பங்களிப்பு :** பாரம்பரிய தானியங்களை நவீன மற்றும் உயர்தர உணவு வகைகளில் அறிமுகப்படுத்தி, அவற்றை நகர்ப்புற நுகர்வோர் மத்தியில் பிரபலப்படுத்துகின்றனர்.

**எடுத்துக்காட்டு :** செஃப் அவினாஷ் மார்ட்டின்ஸ், ஃபாக்ஸ்டெயில் தினை ரிசொட்டோ மற்றும் தினை லட்டுகள் போன்ற உணவுகள்.

**பங்குதாரர் வகை :** அரசு மற்றும் சர்வதேச அமைப்புகள்

**பங்களிப்பு :** கொள்கை ஆதரவு மற்றும் உலகளாவிய அங்கீகாரத்தை வழங்குகின்றன.

**எடுத்துக்காட்டு :** ஐக்கிய நாடுகள் சபை 2023-ஆம் ஆண்டை 'சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக' அறிவித்தது. இந்திய அரசின் சிறுதானிய இயக்கம்.

**பங்குதாரர் வகை :** சமூக அமைப்புகள்

**பங்களிப்பு :** விவசாயிகளுக்கு விதை சேமிப்பு, கரிமச் சான்றிதழ் மற்றும் சந்தை அணுகல் ஆகியவற்றில் உதவுகின்றன.

**எடுத்துக்காட்டு :** தேசி கிரேன் கலெக்டிவ், பார்ம்2ஃபுட் ஃபவுண்டேசன்.

**4. தற்போதைய சவால்கள் மற்றும் எதிர்காலப் பார்வை**

இந்த உற்சாகமான வளர்ச்சிக்கு மத்தியிலும், பல சவால்கள் நீடிக்கின்றன.

**சந்தை அளவு :** அரிசி மற்றும் கோதுமையுடன் ஒப்பிடும்போது, பூர்வீக தானியங்களுக்கான சந்தை இன்னும் மிகச் சிறியதாகவே உள்ளது.

**உள்கட்டமைப்பு :** விவசாயிகளுக்கு முறையான சேமிப்பு, பதப்படுத்துதல் மற்றும் விநியோக உள்கட்டமைப்பு வசதிகள் குறைவாக உள்ளன.

**அரசு ஆதரவு :** பாரம்பரிய பயிர்களுக்கு இன்னும் பரவலான அரசு ஆதரவு தேவைப்படுகிறது.

**நுகர்வோர் விழிப்புணர்வு :** நகர்ப்புறங்களைத் தாண்டி, பரந்த நுகர்வோர் மத்தியில் இந்தத் தானியங்களின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது.

இருப்பினும், இந்தியாவின் ஆரோக்கியம் சார்ந்த நகர்ப்புற மக்கள் தொகை அதிகரித்து வருவதால், இந்தத் தானியங்களுக்கான தேவை தொடர்ந்து வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசு மற்றும் தனியார் முயற்சிகள் இணைந்து செயல்படுவதன் மூலம், இந்த விதைகள் ஒரு பெரிய இயக்கமாக மாறும் சாத்தியம் உள்ளது.

**5. கடந்த காலத்திலிருந்து எதிர்காலத்திற்கு :** இந்தியாவின் உணவு எதிர்காலம் புதிய கண்டுபிடிப்புகளில் மட்டு மல்ல, அதன் வளமான கடந்த காலத்தை மீண்டும் கண்டறிவதிலும் உள்ளது. இந்த மறுமலர்ச்சி, உணவு என்பது வெறும் நுகர்வுப் பொருள் மட்டுமல்ல, அது நமது சுற்றுச்சூழல், ஆரோக்கியம் மற்றும் கலாச்சாரத்தின் ஒரு பிரிக்க முடியாத அங்கம் என்பதை நினைவூட்டுகிறது. விவசாயி அமித் பாட்டீல் தனது தினை வயலில் நின்று கொண்டு பெருமை உடன் கூறுவது போல, 'நாம் அடுத்த சூப்பர்ஃபுட்டைக் கண்டு பிடிக்கத் தேவையில்லை. அதை நாம் நினைவில் வைத்திருந்தால் போதும்.' இந்த சிறிய விதைகள் பெரிய கதைகளைக் கொண்டிருக்கின்றன. மேலும் அவை இந்தியாவின் நிலைத்தன்மை வாய்ந்த எதிர்காலத்திற்கு வழிகாட்டக்கூடும்.

**நன்றி : டைம்ஸ் நவ்**

தமிழாக்கம் : **கோ. சுரேஷ்குமார், ஓய்வு பெற்ற வேளாண் அறிவியல் கல்வி ஆசிரியர், கோவில்பட்டி. 94436 20932.**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741